செ.வெ.எண்: 662 நாள்: 6.08.2010.

# செந்தூர் எக்ஸ்பிரஸ் ரெயிலை தினமும் இயக்க வேண்டும் என மம்தா பானர்ஜி அவர்களை நேரில் சந்தித்து மு.க.அழகிரி அவர்கள் கோரிக்கை

வாரத்தில் ஒருநாள் மட்டுமே இயங்கும் செந்தூர் எக்ஸ்பிரஸ் ரெயிலை தினமும் இயக்க வேண்டும் என்று மாண்புமிகு மத்திய ரயில்வே துறை அமைச்சர் மம்தா பானர்ஜியை நேரில் சந்தித்து மாண்புமிகு மத்திய இராசயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் திரு.மு.க.அழகிரி அவர்கள் கோரிக்கை இன்று(5.08.2010) அளித்தார்.

முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூருக்கு சென்னையில் இருந்து செந்தூர் எக்ஸ்பிரஸ் ரெயில் தற்போது வாரத்திற்கு ஒருநாள் மட்டுமே இயக்கப்பட்டு வருகிறது. பக்தர்கள் மற்றும் தென் மாவட்ட மக்களின் நலனை கருத்தில் கொண்டு செந்தூர் எக்ஸ்பிரஸ் ரெயிலை தினமும் இயக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் அண்மையில் தூத்துக்குடி மாவட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தந்த மாண்புமிகு மத்திய இராசயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் மாண்புமிகு மத்திய இரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் திரு.மு.க.அழகிரி அவர்கள் டெல்லியில் மாண்புமிகு மத்திய ரயில்வே துறை அமைச்சர் மம்தா பானர்ஜியை நேரில் சந்தித்து செந்தூர் எக்ஸ்பிரஸ் ரெயிலை தினமும் இயக்க கோரிக்கை விடுத்து உள்ளார். அப்போது அவர் மம்தா பானர்ஜியிடம் கூறியதாவது.

தமிழகத்தில் திருந்செந்தூர், இந்துக்களின் புனித தலமாக விளங்குகிறது. தமிழகத்தின் அனைத்து பகுதிகளில் இருந்தும் மற்றும் அண்டை மாநிலங்களில் இருந்தும் இந்த புனித தலத்திற்கு தினமும் அதிக அளவில் மக்கள் வருகிறார்கள். இந்த மக்களின் போக்குவரத்தை கவனத்தில் கொண்டு தற்போது சென்னை-திருச்செந்தூர் இடையே செல்லும் வாராந்திர ரெயிலை தினசரி ரெயிலாக இயக்க வேண்டும்.

மேலும் தமிழகத்தில் ஜவுளித்துறையின் முக்கிய மையங்களில் ஒன்றான திகழும் திண்டுக்கல் மாவட்டம் அம்பாத்துரை சந்திப்பில் ஜவுளித்துறையில் ஈடுபட்டுள்ள மக்களின் போக்குவரத்தை கருத்தில் கொண்டு தூத்துக்குடி-மைசூர் மற்றும் நாகர்கோவில்-கோவை ஆகிய 2 விரைவு ரெயில்களையும் அம்பாத்துரையில் நின்று செல்ல உத்தரவிட வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

மாண்புமிகு மத்திய இராசயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் திரு.மு.க.அழகிரி அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றிட தேவையான நடவடிக்கை மேற்கொள்வதாக மாண்புமிகு மத்திய ரயில்வே துறை அமைச்சர் மம்தா பானர்ஜி அவாகள் உறுதி அளித்து உள்ளார்.

வெளியீடு : இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9